RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2128

OPEN ACCESS

# மனித சமூக தொழில்சார் வாழ்வியலின் இருப்பினை வெளிப்படுத்தி நிற்பதில் வசந்தன் கூத்துப் பாடல்கள் பெறும் முக்கியத்துவம்

துஷ்யந்தி சத்தியஜித் [அ, *]

[அ] நுண்கலைத்துறை, கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

# The importance of Vasanthan Kooththu (Art Form) songs in revealing the existence of human social and professional life

**Thushyanthi Sathiyajith [a, *]**

[a] Department of Fine Arts, Eastern University, Sri Lanka.

* Corresponding Author: achchu281@yahoo.com

Received: 24-01-2021
Revised: 22-03-2021
Accepted: 25-03-2021
Published: 30-03-2021

Check for updates

## ABSTRACT

The culture of a community plays a major role in narrating the history and life of that particular community. This culture includes various aspects such as religion, ritual, faith, food, customs or practices as well as art and culture. Among these aspects, art is not only for entertainment; but it is also for exposing the social character and tradition of that particular community. The undeniable thing here is the factor that art forms in every country, and in every region are not only to create entertainment but also to preserve the antiquity of their existence up to now. In that respect, Vasanthan Kooththu, one of the Sri Lankan Tamil art forms, is a notable art form in that category. Even though this art form is found in Batticaloa and Jaffna areas, they have differences between each other. This study focuses on the songs of Vasanthan Kooththu performed in the Katuthavalai area of Batticaloa. This type of Kooththu is an art form of tapping and dancing with two sticks in the hands; however, these sticks are also used to express the function of the meaning of the song with dance. Even though this type of Kooththu is a dance form, the greatness of the songs used in this Kooththu is significant. There are 62 types of Vasanthan poems have been in use in the Art Form performances. These have been compiled around the year 1940. These 62 genres of songs are divided into six genres and compiled, namely 'Kattiyam', 'Thoththiram', 'Sariththiram', 'Tholil', 'Vedikkai', 'Vilaiyaattu' and are still in the practice during Kooththu performance. As mentioned earlier, these Kooththu song systems emphasize the art expression of the culture of a community. The songs related to the professions or job involved in these Kooththu songs express the whole series of activities of the agricultural industry. The reason that these Kooththu songs to aim to explore only a specific industry is to be explored. It is vital to discover this factor; and this article explores about how these Kooththu songs are still in operation today as a popular form of folk music performance to describe a particular social professional life, beyond globalization trends, imposition and blends of colonization thinking. This article also explores the significance of these Kooththu songs hold, the importance they have gained in the life of people as well as the value that these Kooththu songs have even today.

**Keywords:** Vasanthan Kooththu Songs, Professional life style, Sri Lankan Art Form, Cultural Globalization.

## முன்னுரை

ஈழத்ததமிழர் பண்பாடு வளமானது. இலங்கையின் சமூகம் பன்மைப் பண்பாடுகளைக் கொண்ட பன்மைச் சமூகம் ஆகும். ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒவ்வொரு வகையான நிகழ்கலை அடையாளம் உண்டு. அந்தவகையில் ஒரு குறிப்பிட்ட நிகழ்கலை ஒரு குறிப்பிட்ட சமூகத்தை மட்டும் அடையாளப்படுத்துவது மட்டுமல்லாமல் அவை மற்றொரு சமூகத்தினரிடமிருந்து வேறுபட்டும் காணப்படுகிறது.

அந்தவகையில் ஈழத்து மட்டக்களப்பு சமூகத்திற்கும் தனித்துவமான பண்பாடு காணப்படுகிறது. குறிப்பாக தமிழர்களது பண்பாட்டுக்கூறுகள் இன்றும் தனித்துவமாகத் திகழ்கின்றன. அந்நியர் ஆட்சியின் கீழ் இப்பிரதேசம் இருந்திருந்தாலும் தனக்கேயுரிய பண்பாட்டினை பறைசாற்றி நிற்பதில் இன்றளவும் தனித்துவத்துடன் திகழ்கிறது. குறிப்பாக மக்கள் இசையான நாட்டாரிசையின் செல்வாக்கு தமிழிசையின் பெருமை கூறுவதாக நீள வளர்ந்திடக் காணலாம். மட்டக்களப்பு வாவியின் (ஆறு) அழகு பரப்பிலே சித்திரை முழு நிலவின் ஒளியில் விபுலானந்த அடிகளின் உள்ளத்தினுள்ளே கேட்ட நீரரமகளிர் தம் இசை நயமே (கடல் கன்னியர் எழுப்பும் ஒரு வகை ஓசை) இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த வழிவந்த மட்டக்களப்பின் சிறப்புப்பெற்ற பாடல்களே வசந்தன் கூத்துப் பாடல்கள் ஆகும். பலவகையாக காணப்படும் இப் பாடல்களுள் தொழிற் பாடல்கள் இன்றளவும் சிறப்புப் பெறும் பின்னணியினையும், முக்கியத்துவத்தினையும் இவ் ஆய்வு முன்னிறுத்துகிறது.

## ஆய்வின் உரையாடல்களும் பெறுபேறுகளும்

மட்டக்களப்பு பிரதேசம் தமிழர் செறிந்து வாழும் பிரதேசமாகும். கிழக்கே கடலையும், கடல் சார்ந்த பிரதேசங்களையும் உள்ளடக்கிய மட்டக்களப்பு பிரதேசம், மேற்கே செல்லச் செல்ல பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பரந்துபட்ட வயல் நிலங்களையும், காடுகளையும் தரிசு நிலங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. இப் பிரதேசத்தின் நடுவே வடக்குத் தெற்காக முப்பது மைல் நீண்டு மட்டக்களப்பு வாவி என்றொரு நீர்ப்பரப்பு காணப்படுகிறது. மட்டக்களப்புப் பட்டினத்தை ஊடறுத்துச் செல்லும் இவ் வாவி ஏறத்தாழ 27,527 ஏக்கர் பரப்பினைத் தன்னுட் கொண்டமைவதால் இலங்கையிலே மிகப் பெரிய வாவி எனக் கருதப்படுகிறது (Maunaguru, 2014).

ஒரு பிரதேசத்தின் நில அமைப்புக்கு ஏற்பவே அங்கு வாழும் மக்களின் தொழில் வசதிகளும் அமைந்திருக்கும். அதன்படி விவசாயமே மட்டக்களப்பு மக்களின் முக்கிய பரம்பரைத் தொழிலாகக் காணப்படுகிறது. விவசாயத்துடன் மீன்பிடி, மந்தை வளர்ப்பு, காட்டுத் தொழில் ஆகியவற்றிற்கும் இப் பிரதேசம் வாய்ப்பாக அமைந்துள்ளது. காட்டு வளங்களைப் பயன்படுத்தி அத்தொழிலிலும் பலர் ஈடுபட்டுள்ளனர். இவற்றோடு கைத்தறி நெசவு, பாய் இழைத்தல், கிடுகு இழைத்தல், தும்புவேலை முதலான குடிசைக் கைத்தொழில்களும் இப் பிரதேச மக்களின் சில குடும்பங்களின் பொருளாதார வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைகின்றன. (Balasundaram, 2005)

ஆரம்பத்தில் குழுக்களாக வாழ்ந்து பின்னர் குலங்களாகவும், குடிகளாகவும் வாழ்ந்து வரும் மட்டக்களப்பு மக்கட் சமுதாயமானது தமது கடமைகளை ஒன்றிணைத்து பகிர்ந்து கொண்டது. ஒவ்வொரு குலத்தினரதும் குடியினரதும் தொண்டூழியங்கள் ஒவ்வொருவருக்கும் அவசியமாகத் தேவைப்பட்டன. அவை கோயிற் சடங்குகள் முதல் மரணச் சடங்கு ஈறாக அனைத்திலும் அமைந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நீர்வள, நிலவளஞ் சான்ற மட்டு நன்னாடு 2500 வருடங்களுக்கு முற்பட்டு இங்கே வாழ்ந்து வரும் பழந்தமிழ்க் குடிகளையுடையது (Kandaiya, 2002). பிற்காலங்களில் வந்தேறு குடிகள் பல மட்டக்களப்பில் குடியேறியிருந்தாலும் சாதியை மையப்படுத்திய பொதுவான சமூக அமைப்பு முறை இங்கு காணப்படுகிறது எனலாம்.

## வசந்தன் கூத்தின் கட்டமைப்பும், அழகியல் தன்மையும்

வசந்தன் உணர்ச்சியூட்டும் பொழுதுபோக்குக் கலையாகும். ஒரு குறிப்பிட்ட சமூகத்தை அடையாளப்படுத்துவதில் மதமும், தொழிலும் முக்கியமானவையாக காணப்படுகின்றன. குறித்த சமூக பண்பாடு இவற்றை பிரதானமாகக் கொண்டே மேற்கிளம்பும். ஒவ்வொரு சமூகமும் தனித்துவமான கலை அடையாளங்களை தம்முள் கொண்டிருக்கும். அந்த வகையில் மட்டக்களப்பு சமூகத்தினை அடையாளப்படுத்தும் ஆடற்கலைகளுள் ஒன்று வசந்தன் கூத்தாகும். மட்டக்களப்பு நிலமானிய சமூக அமைப்பைக் கொண்டது. நீர்வளத்தையும், நில வளத்தையும் கொண்டு விவசாயத்தினை பிரதான தொழிலாக கொண்ட சமூக அமைப்பு இங்கு நிலவுகிறது.

இவ் வேளாண்மை சமூகத்தாரிடையே வசந்தன் கூத்து காணப்படுகிறது. வயல் விதைப்பிற்கு முன் மழை வேண்டி கொம்பு முறித்து (சடங்கு நிகழ்வு) அறுவடைக்குப் பின் ஓய்வாக சந்தோசமாக ஈடுபடும் கலை வடிவமாக வசந்தன் கூத்து காணப்படுகிறது. இதனை வி.சீ.கந்தையா அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். வசந்தன் என்ற சொல்லுக்கு “நிறைந்த இன்பம்” எனும் கருத்து கிராமங்களில் வழங்குவதையும் காணலாம். அதை ஏற்றுக் கொண்டால் மக்கள் வயல் வேலைகள் முடிந்த பின்னர், நிறைந்த இன்பத்தினால் ஆடும் ஒரு இனிய கூத்து என இதனைக் கொள்ள இடமுண்டு (Kandaiya, 2002). அதனால்தான் சுரண்டல் சமுதாயச் சூழ்நிலையில் உழைப்பானது வேதனையான ஒன்றாக இருப்பினும் படைப்பு சார்ந்த உழைப்பு மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாக இருக்கின்றது என்கின்றனர் (Mubisal, 2018).

வசந்தன் கூத்து சமூகத்தில் உயர் சாதிகளாக கொள்ளப்பட்ட வேளாள, முக்குவ சாதியரிடத்தேயும் பிற்காலத்தில் குடியேறிய சீர்பாதக்கார சாதியரிடத்தேயும் வழக்கிலுள்ள கலை வடிவமாக காணப்படுகிறது. மார்கழியில் விதைத்து பங்குனியில் அறுவடை கண்டு உழைப்பால் பெற்ற பொருள்களுடனும், வளத்துடனும் சந்தோசமாக வாழ்ந்த வேளாண் சமூகத்தவரின் தனித்துவக் கலையாக இவ் வசந்தன் கூத்து காணப்படுகிறது. இச் சமூகத்தவர் மகிழ்ச்சியாக இருந்த காலத்தில் நடைபெறும் கண்ணகி அம்மன் சடங்கு வழிபாடும் இவ் உயர் சாதியினர்க்குரியதாகியது. இவர்களின் கலையும், கண்ணகி அம்மன் சடங்கின் ஓர் அம்சமாகவும் மாறியது. உயர் வர்க்கத்தினரின் கலை உயர் வர்க்கத்தினரின் வழிபாட்டில் முதன்மை பெற்றதில் வியப்பில்லை.

இவ்வாறு காணப்படும் வசந்தன் கூத்தினை வசந்தன் ஆட்டம் என்றும் குறிப்பிடுவர். ஆனால் கூத்து எனும் சொல்லே பயில் நிலையில் உள்ளது. வசந்தன் எனும் பெயர் இங்கு வந்தது பற்றி நோக்கினால் “இருதுக்கள் ஆறினுக்கு வசந்தன் ராஜாவாகு” மென்பது புலவரது கொள்கை. ஓர் ஆங்கிலப் புலவர் “Spring the Sweet in the year pleasant king”. இன்னிளவேனில் எனும் ஆண்டினுக்கு இன்ப வேந்தன் என்கிறார்” என்று வசந்தன் கவி பற்றி தன்னுடைய கட்டுரையொன்றில் சுவாமி விபுலானந்தர் குறிப்பிடுவதைக் கொண்டு வசந்த காலத்திற்குரியதானபடியால் இவை வசந்தன் எனப் பெயர் பெற்றன எனக் கொள்ள முடிகிறது (Maunaguru, 2014). உழைத்த பொருள்களுடன் சந்தோசமாக வாழும் காலத்தில் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடி ஆடும் ஆடல் வசந்தமான ஆடலாக அமைவதில் வியப்பில்லை.

கண்ணகி வழிபாடு கி.பி. 2-ம் நூற்றாண்டு இறுதியில் கயபாகு மன்னனால் ஈழத்திற்கு கொண்டு வரப்பட்ட வழிபாட்டு முறையாகும். மதுரையை எரித்த கண்ணகியின் கோபம் தணிவிக்க வசந்தன் கூத்து ஆடப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. எனவே கண்ணகி வழிபாட்டு முறைகளோடு இக் கலை வடிவம் ஈழம் வந்திருக்கலாம் போல் தெரிகிறது. ஏற்கனவே மட்டக்களப்பிலிருந்த வேளாண் சமூகத்தவர் தமது தொழிலை அடிப்படையாகக் கொண்டு அச் செயற்பாடுகளை பாடல்களாக உருவமைத்து மகிழ்ந்திருந்தமை கண்கூடு. ஆகவே கண்ணகி கோபம் தணிவித்த வசந்தனுடன் இங்கிருந்த வேளாண் சமூகத்தவரின் கலையம்சங்களும் இணைந்தமையால் வேளாண்மை செய்கை பற்றிய அதிகமான பாடல்களை வசந்தன் கொண்டிருப்பதற்கு காரணம் எனலாம். அத்தோடு இங்கிருந்த சிறு தெய்வங்களுடன் தமிழ் நாட்டில் பிரபலமான தெய்வங்களையும் புகழ்வதாக வசந்தன் பாடல்கள் காணப்படுவதும் இவ் வசந்தன் இந்தியாவிலிருந்து இங்கு வந்து கலந்த கூத்தாக காணப்படுகின்றமைக்கு சான்று எனலாம்.

தமிழ்நாட்டினின்று ஈழ நாட்டிலும் சிறப்பாக மட்டக்களப்பிலும் குடியேறிய விவசாயம் செய்த தமிழர்கள் தம்முடன் இவ் வசந்தனாட்டத்தைக் கொணர்ந்தனரா? அன்றி தமது இங்கிருந்த விவசாய வாழ்க்கை முறைக்கு ஏற்ப ஒரு வசந்தன் கூத்தை உருவாக்கினரா என்பது பற்றி திட்டவட்டமாக ஏதும் கூறமுடியவில்லை. எவ்வாறாயினும் வசந்தன் கூத்து விவசாயத்தை ஒட்டியது என்பது தெளிவான உண்மையாகும். விவசாய மக்களின் மத்தியில் வசந்தன் கூத்துச் செல்வாக்குப் பெற்றது (Maunaguru, 2014).

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.தி.சதாசிவஐயர் என்பவர் மட்டக்களப்பில் பாடசாலைப் பரிசோதகராக கடமையாற்றிய போது வசந்தன் ஏட்டுப் பிரதிகளை தொகுத்து “மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு” எனும் பதிப்பினை 1940ம் ஆண்டளவில் வெளியிட்டிருந்தார். அவர் இப் பதிப்பு பற்றி கூறும் பொழுது “இப்பதிப்புக்கு ஆதாரமாகக் கிடைத்த ஏட்டுப் பிரதிகளுள் காரைதீவு, கல்லாறு, களுதாவளை, தேற்றாத்தீவு, வந்தாறுமூலை என்னுங் கிராமங்களிற் கிடைத்த ஏடுகளே கவிகள் அதிகம் உடையனவாய்ப் பாட நிச்சயஞ் செய்வதற்குப் பெரிதும் உதவியாயிருந்தன” என்கிறார் (Sathasiva Iyer, 1940).

இத் திரட்டில் 62 வசந்தன்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றை இவர் ஆறு பாகங்களாக பிரித்துள்ளார். இந் நூல் ஒன்றுதான் வசந்தன் பாடல்களை எழுத்துருவில் தரக் கூடிய மூல ஆதாரமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் வேளாண்மைத் தொழில் ஓர் ஒழுங்கு முறையில் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து வேளாண்மையை பிரதானமாக கொண்ட சமூகத்தவரால் வசந்தன் கூத்து நிகழ்த்தப்பட்டு வந்துள்ளமை தெளிவாகிறது. சமூகத்தில் உயர் நிலையில் உள்ளவர்களது வழக்கமானது சமூக வழக்கமாதல் இயல்பானதே.

சாதாரண மக்கள் பலவகையான தொழில்களில் ஈடுபடுகின்றார்கள். அத் தொழில் சார்ந்து அதில் ஈடுபடும் பொழுதோ ஓய்வாக இருக்கும் பொழுதோ பாடும் பாடல்கள் உணர்ச்சி பூர்வமாக தாளக்கட்டுகளுடன் காணப்படுதல் நாட்டுப் பாடல் அல்லது நாட்டார் பாடல் எனப்படுகிறது. இவ் வகையானவை காலம் காலமாக வாய்மொழி மூலமும், ஆடல் மூலமும் மட்டுமே அடுத்த சந்ததிக்கு கடத்தப்பட்டு தொடர் சங்கிலி போன்று வந்துள்ளன.

தி.சதாசிவஐயர் அவர்கள் வசந்தன் பாடல்களையும் நாட்டார் பாடல் வகையினுள் குறிப்பிடுவதனை பின்வருமாறு காணலாம்.

நாட்டுப் பாட்டுக்கள் பழையகாலத்திலிருந்து வழங்கி வருவனவாயும் இருக்கலாம், சமீப காலத்தனவாயும் இருக்கலாம். இவ்வித விளையாட்டுப் பாடல்கள் பழைய தமிழ்க் காவியங்களில் காணப்படும் வரிப்பாட்டு என்னும் வகையயைச் சார்ந்தன எனலாம். “வரியாவது அவரவர் பிறந்த நிலத் தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையுந் தோன்ற நடித்தல்” என்றும் “வரிப்பாடல், தெய்வஞ் சுட்டியும் மக்களைப் பழிச்சியும் (புகழ்ந்தும்) வரும்” என்றும்,

“சிந்துப் பிழுக்கை யுடன் சந்தி யோர்முலை

கொந்தி கவுசி குடப்பிழுக்கை - கந்தன்பாட்(டு).

ஏற்ற உழைமை பறைமைமுத லென்றெனண்ணிக்

கோத்தவரிக் கூத்தின் குலம்

என்றும் சிலப்பதிகார உரையிற் காணப்படும் செய்திகளான் இது அறியப்படும். ‘மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு’ என்னும் இந் நூலில் தொகுக்கப்பட்டுள்ள பாடல்கள் மேற்குறித்த வரிக்கூத்துப் பாடல் (folk Dance song) வகையுள் அடங்குவனவாம்.

## பாடல் அமைப்பு

வசந்தன் கூத்துப் பாடல்கள் கிராமிய நாட்டார் மெட்டுக்களை அடிப்படையாக கொண்டுள்ளமையை அவதானிக்கலாம்.

வசந்தன் கூத்தில் வேளாண்மை வசந்தன் மிக முக்கியமாக கருதப்படுகிறது. (தகவல்: தேனூரான்) எனவே உழவுத் தொழில் சார்ந்த இச் சமூகத்தவர் ஓய்வினைக் கழிக்கப் பாடிய பாடல்களே வசந்தன் பாடல்களின் ராக, தாளங்களுக்கு அடித்தளமாக இருந்திருக்க வேண்டும்.

உழவர் பாடும் பாடல்களின் இராகம், பொருள் என்பவற்றை அடிப்படையாக வைத்தே உழவுத் தொழில் சார்ந்த இத்தகைய பாடல்கள் ஆரம்பத்தில் ஒரு புலவரால் பாடப்பட்டிருக்க வேண்டும். வேளாண்மை வெட்டு (அறுவடை) முடிந்து ஓய்வாக இருக்கும் சித்திரை, வைகாசி மாதங்களில் தொழிலின் போது உடலுழைப்பை மறக்கப் பாடிய இப்பாடல்கள் ஓய்வு நேரத்தைக் கழிக்கப் பாடப்பட்டிருக்க வேண்டும். கண்ணகி வழிபாட்டின் பின் இதே ராகங்களில், கண்ணகியைத் துதிக்கும் வசந்தன்களும் ஏனைய தெய்வங்களான முருகன், திருமால், மாரியம்மன் ஆகியோரைக் குறிக்கும் வசந்தன்களும் பாடப்பட்டிருக்க வேண்டும். இவ் வசந்தன் கூத்தினை திட்டமாக நடத்தத் தொடங்கிய பின் புராண இதிகாசக்கதைகளும் ஏனைய வேடிக்கை நிகழ்ச்சிகளும் வசந்தன் கூத்தில் இடப்பெற்றிருக்க வேண்டும். இவ்வண்ணம் உழவர் பாடலில் ஆரம்பித்து தெய்வங்களைப் பாடத் தொடங்கி ஏனைய விடயங்களையும் உள்ளடக்கி இப்பாடல்கள் பல்வேறு புலவர்களால் பல்வேறு காலங்களிற் பாடப்பட்டிருக்க வேண்டும் (Maunaguru, 2014).

வசந்தன் பாடல்களைப் பாடியோர் புலவர்கள் என்றே அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு வசந்தனுக்கும் அது பாட வேண்டிய சந்தத்தைக் காட்டும் தரு என்பது முதலிற் குறிக்கப்பட்டிருக்கும். அந்தத் தருவின் ஓசை விதப்படியே அதன் பின்வருங் கண்ணிகள்பாடப்பட வேண்டியன. இப் பாடல்கள் தாளம், ஓசை நயம், மோனை, எதுகைத் தொடை நயம் உடையனவாய், பக்தி, உவமை, நகை, வீரம் ஆகிய சுவை பொருந்தி இருத்தலை அவற்றைப் படித்து அறியலாம். இதனால் இக் கவிகளுட் பல கல்வியறிவு படைத்தவர் சிலரால் ஆக்கப்பட்டன எனத் துணிதல் மிகையாகாது (Sathasiva Iyer, 1940). இக் கூற்றை அடியொட்டியதாக மட்டக்களப்பு தமிழகத்தில் பின்வருமாறு காணப்படுகின்றது.

வசந்தன் பாடல் பலவற்றையும் செய்த புலவர்கள் இந் நாட்டுக் காரைதீவினையும் தம்பிலுவில்லையும் சேர்ந்தவர்களாய் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சின்னப் புலவர், சின்னவி அண்ணாவியார், வசந்தராச பிள்ளை என்ற பழம்பெயர்கள் சில அவ்வூர்களில் இதுபற்றிக் கேட்கப்படுகின்றன (Kandaiya, 2002).

இவ்வாறு காணப்படும் இப்பாடல்களில் கர்நாடக சங்கீதத்தில் பாடலின் ராகங்களுக்கு அடிப்படையாக ஸ்வர ஸ்தானங்கள் காணப்படுவது போன்று வசந்தன் பாடல்களுக்கு அடிப்படையாக தருக்கள் காணப்படுகின்றன.

இதனையே பேராசிரியர் வித்தியானந்தன், இசையிலுள்ள ஒத்திசை, ஒழுங்கு, இராகம், பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடும். ஒவ்வொரு இனத்திடையேயும் காணப்படும் ஒத்திசை, ஒழுங்கு, இராகம் என்பன தமக்கெனச் சில தனித்துவங்களைக் கொண்டிருக்கும் என்கிறார் (Vidhyanathan, 2009).

## தொழிற்பாடல்களாகக் காணப்படும் வசந்தன் கூத்து வேளாண்மைப் பாடல்கள்

தொழில் பணிகளில் ஈடுபடும் போது வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடனும் அலுப்பை போக்கிக் கொள்ளவும் கூட்டுப்பணி புரிதலை இசைவுபடுத்திக்கொள்ளவும் பாடப்படும் பாடல்கள் தொழில் பாடல்கள் ஆகும். இவை நாட்டார் பாடல்களில் ஒன்றாகும். பொதுவாக தொழில் புரியும் போது பாடும் பாடல்களைத் தொழில் பாடல்கள் என்பர். தொழிலின் சுமையும் உழைப்பின் களைப்பும் தெரியாமல் இருக்க பாடுகின்றார்கள்.

வேளாண்மைத் தொழில் பாடல்கள் விதைவிதைத்து நீர் பாய்ச்சி, களையெடுத்து, கதிர் அறுத்து, போரடித்து, வண்டியில் ஏற்றிச் செல்லும் வரை பல வளர்ச்சிப் படிகள் உள்ளன. அவ் வளர்ச்சிப்படிகள் ஒவ்வொன்றுக்கும் அவ் வேலையைச்செய்யும் நிலையில் பாடல்கள் பாடப்படுகின்றன.

ஈழத்து மட்டக்களப்பு வசந்தன் கூத்துப் பாடல் வகையுள் தொழிற் பாடல்களாக காணப்படுவதுடன் இன்றுவரை பயில்நிலையிலுள்ள வேளாண்மைத் தொழிலின் படிநிலைகள் வசந்தன் கவித்திரட்டு நூலினை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு.

### வேளாண்மை வசந்தன் (தரு)

தெந்தென்னா தென்னா தினனா

தெந்தென்னா தென்னா தெய்தெய்

சீருலவு மத்தகய மாமுகனை நாமகளைச்

சிந்தைசெய்து செந்செல்வசந்தன் இசைபாட

ஏருலவு மீசனோ டிமயவரை மங்கையுடன்

எங்குமுள்ள தேவர்பதம் என்றுமறவேன்.

மள்ளர்களெல் லோருமறை யோரிடஞ்சென் றார்விதைக்க

மாபெரிய ஏர்முகூர்த்தம் பார்த்துச் சொலுமென்றார்

பள்ளர்களே யோணமுடன் பஞ்சமி யின்றாம்நல்ல

பானுவிற்ப கடுகள் விட்டே விதையுமென்றார்.......

### வேளாண்மை வெட்டு வசந்தன்

வேலையாளர் மேலுமொரு நாள்மூகூர்த் தத்தில் தங்கள்

வேளாண்மை யையறுக்க வேதொடங் கினார்

காலமே யெழுந்துகதி ரானவைகொய் வாரிந்தக்

கத்திவெட்டு தில்லையென்று காட்டிப் பறைவார்.

வெட்டுதில்லைஇந்தக்கத்தி மொட்டைதானென்பாரந்த

வேலையறி யாதகொல்லன் தன்னிடம் போவோம்

எட்டுச்சல்லிகத்திக்கிர யம்வாங்கிடும்கொல்லன் அவன்

எங்கொளித்துப் போனானென்று தேடுவம் வாரீர்.........

### உப்பட்டி கட்டு வசந்தன்

தந்தனாதன தந்தன தந்தன

தந்தனாதன தந்தனத் தானா

கொண்டலாலே மழையுமிருளுது

கூடுங்கோ மள்ள ருப்பட்டி கட்ட

தென்றல் வந்திடும் தெற்குத் திசையினில்

சென்று காரிருள் மண்டி முழங்குது

கோடை யாலே மழையு மிருளுது
கூட்டுங் கோகதி ரானவை யெல்லாம்
வாடை யாலே மழையு மிருளுது
வாருங்கோ மள்ளர் உப்பட்டி கட்ட
தேடு நாரில் ஒடுக்கி யடுக்குங்கள்
சென்று நாங்களெல் லோரும் சுமப்போம்
வாடுகின்ற பசியும் வருகுது
மள்ளரே பள்ளி எங்கடா போனாள்........

### சூட்டு வசந்தன்

### (சூடு வைத்தல்) - (தரு)

தந்தன தந்தன தந்தன தந்தன
தந்தனத் தானானா தெய்தானா
சிந்தையுடன் மள்ளர் செந்செல்போ ரேற்றிய
செந்தமிழ் பாடவென் றேதுணிந்தேன்
கந்தனின் முன்வருங் கற்பக மேயெனைக்
காத்து ரெட்சித்தருள் வாயெப்போதும்
மந்தர மாமலை போலவிச் சூடுகள்
வான மளாவுத டாவென்தோழா
சுந்தர மாகவிச் சூட்டினை வேய்ந்து
துலங்க முடிகவிப் பீரெல்லோரும்........

### மாடு பிடித்தல் வசந்தன் - (தரு)

தானதந்தத் தானா - தனந்தன - தானதந்தத் தானா
தானதந்தத் தானா - தனந்தன - தானதந்தத் தானா
முந்தியே துதிக்கும் முக்கணனை
வந்தனை புரிந்தே
பந்திபந் தியதாய்ப் பகடுகள்
மள்ளர்(கள்) தான்பிணைத்தார்
கந்திலே யடுத்தார் கடாக்களைக்
காலியோடு சாய்த்தே
வெந்துவோடு வந்தே விநாயகத்
தந்திபூசை செய்தார்..........

### சூடுபோடல் வசந்தன்

தான தானின தான தானின
தான தானின தானினா
சூட்டைத் தள்ளடா மாட்டை யேத்தடா
சோம்பல் தனத்தைத் துடையடா
பாட்டைப் பாடடா மாட்டைச் சாயடா
பள்ள ரானவ ரனைவரும்
போரைக் கல்லடா பொலியைக் கீறடா
பொழுது விடியு வளர்ந்த தனத்துப்
பாரைக் பழித்து வளர்ந்த தனத்துப்
பள்ளிகள் யாரையு மழையெடா........

### பொலி காவுகிற வசந்தன் - (தரு)

தானானா தானானா தானதந்தனத் தானானா
சூடஞ்சு கடாவேழு சூடுபோட்டுக் கட்டலாச்சுப்
போடியார் வீட்டுக்குப் புதிர்காவி யேபோறோம்.
போடியார் முன்னேபோக முல்லைக்காரன் பின்னேவர
காணியில் விளைந்தநெல்லைக் காவிக்கொண்டு போறோம்......

மேற்குறித்த பாடல்கள் ஆற்றுகைகளாக இன்றளவும் வசந்தன் கூத்தில் இடம்பெறுகின்றன (Sathasiva Iyer, 1940). இப் பாடல்கள் வேளாண்மைத் தொழிலின் தொடர் செயற்பாடுகளை வெளிப்படுத்தி நிற்பதனைக் காணலாம். வேளாண்மைத் தொழிலின் தொடர் நிலையும் வசந்தன் கூத்தினது தொடர் பேணுகைக்கு முக்கிய காரணம் என்றால் மிகையாகாது.

## முடிவுரை

இலங்கையைப் பொறுத்தவரை நவீனத்துவத்தின் வருகை கிழக்கு மாகாணத்தினை அதிகம் பாதிக்கவில்லை. அதனாலேயே நவீனத்துவ வருகைக்கு முற்பட்ட கிராமியக் கலைகள் இன்றளவும் கிழக்கு மாகாணத்திலும் குறிப்பாக மட்டக்களப்பிலும் மற்றும் ஆய்வாளரின் ஆய்வுப் பிரதேசத்திலும் வாழ்ந்து வரும் கலைகளாக காணப்படுகின்றன. இந்தக் கலைகளுள் வசந்தன் கூத்தும் ஒன்றாகும். மனித நடத்தை முறைகள், நம்பிக்கைகள், கலைகள் என்பன ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்குக் கையளிக்கப்படும் பொழுது "பாரம்பரியம்" தொழிற்படத் தொடங்குகிறது. இவ்வண்ணம் கையளிக்கப்படும் மனித நடத்தைகளுள் இசையும் ஒன்று. வசந்தன் கூத்துப் பாடல்களும் பாரம்பரியமாக கையளிக்கப்பட்டு எழுத்துரு பெற்று தொகுக்கப்பட்டு இன்றும் ஆற்றுகை வடிவமாக திகழ்கிறது. இவற்றுள் மனித சமூக இருப்பினை நிலைநாட்டும் தொழிலை அடிப்படையாகக் கொண்ட வேளாண்மைசார் வசந்தன் கூத்துப் பாடல்கள் பெருவாரியாக ஆற்றுகையில் இன்றும் முக்கியத்துவம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

## References

Balasundaram, E., (2005) Eezaththu naattaar paadalkal, manimegalai pirasuram.

Kandiyaa, V.C., (2002) mattakkalappu Thamizakam, Exil (N. d.enreg: 13022670) B. P 20492604 Asnieres cedar France.

Maunaguru, S., (2014) Mattakkalappu marapuvazi naadakangal, kumaran puththaka illam, Colombo-Chennai

Mubisal, A.A., (2018) Maaksiya irasaniyiyal unarvum athan avasiyamum, Mozithal aayvithaz, Kumaran achchagam, Colombo

Sathaasiva Iyar, T., (1940) Mattakkalappu vasanthan kaviththirattu, Mattakkalappu Thetkkuth Thamizaasiriyar sangam. Sri Lanka.

Viththiyaananthan, S., (2009) Naadagam Naattaariyat Sinthanigal, Edited by Sanmugadhas, A., Kumaran puththaka illam, Colombo-Chennai.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License